**IN THE COURT OF THE DISTRICT MUNSIF,**
**Present: Miss.D.V.Koperundevi, B.Com., LLB., (Hons),**
**District Munsif, Arni.**
**O.S.3/2017**

2026=ம் ஆண்டு மார்ச் மாதம் 10ம் நாள் செவ்வாய்கிழமை பிரதிவாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச்சட்டம் 1969, பிரிவு 3=ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

**D.W.2 கோவிந்தராஜ் வயது 78, த/பெ துரைசாமி**

**நேரம் - 12.10**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

24.02.2026 அன்று என்னை குறுக்கு விசாரணை செய்யும் போது நான் 1992ம் வருடத்திய பட்டாவை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியும் என்று சொன்னதால் தற்போது தாக்கல் செய்ய உள்ளேனா என்றால் அண்ணாமலை என்பவர் இறந்து விட்டதால் பட்டாவை தாக்கல் செய்ய இயலவில்லை. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் 3ம் பத்தியில் பஜனை கோயில் தெருவில் கிழக்கு பக்கம் உள்ள 2வது மனை ஆதியில் அண்ணாமலைபிள்ளைக்கு பாத்தியப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அண்ணாமலைபிள்ளை பெயரில் உள்ள பத்திரத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை, ஆனால் கேள்விப்பட்டுள்ளேன்.

2. அவர் பெயரில் இருந்தது என்பதற்கான ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்ய முடியுமா என்றால் இல்லை, அவர் ஆண்டு அனுபவித்து வந்தார். அவர் ஆண்டு அனுபவித்து வந்ததை நான் நேரில் பார்த்தேனா என்றால் பார்த்துள்ளேன், அவர் என் பக்கத்து வீட்டுக்காரர். அவர் வீட்டிற்கு பக்கத்தில் பொது சந்து, பொது சந்திற்கு பக்கத்தில் என் வீடு உள்ளது. அண்ணாமலை பிள்ளை எப்போது இறந்தார் என்றால் 21.11.1999 அன்று இறந்தார். அவருடைய இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியாது, அவர் மகன் சொல்லிதான் எனக்கு மேற்படி இறப்பு தேதி தெரியும்.

3. அதேப்போல் அண்ணாமலை இடம் கிழக்கு x மேற்கு 15 அடி மற்றும் வடக்கு x தெற்கு 33 அடி என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான்தான் அண்ணாமலைக்கு பாத்தியப்பட்ட பத்திரத்தை பார்க்காமல் எவ்வாறு அளவுகளை சரியாக சொல்கிறேன் என்றால் 1994ம் ஆண்டு அண்ணாமலை என்பவர் ஜெயராமன் என்பவருக்கு கிரையம் கொடுத்ததால்

மற்றும் அதில் நான் சாட்சி கையொப்பம் செய்ததால் மேற்படி அளவுகள் எனக்கு தெரியும். என்னிடம் காண்பிக்கப்படும் பி.வா.சா.ஆ.1 அண்ணாமலை ஜெயராமன் என்பவருக்கு எழுதி கொடுத்த பத்திரம் என்றால் சரிதான். 2வது பக்கத்தில் அண்ணாமலை என்பவருக்கு பத்திரம் முன்னிலைக்கு மற்றும் பட்டா முன்னிலைக்கு பாத்தியப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை, கிராம நத்தம் என்பதால் பட்டா கொடுக்கவில்லை.

4. தற்போது உள்ள சர்வே எண்ணைதான் கிராம நத்தம் என்று குறிப்பிடுகிறேன் என்றால் சரிதான். கிராம நத்தம் சர்வே எண். 32/8 என்றால் சரிதான். மேற்படி கிராம நத்தம் சர்வே எண்ணை பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல, 5வது பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதேப்போல் பி.வா.சா.ஆ.1 ஜக்பந்தியில் முத்தன் (எ) முனுசாமி நாயுடு வீட்டிற்கு கிழக்கு என உள்ளது என்றால் சரிதான். மேற்படி முத்தன் (எ) முனுசாமி நிலம் மேற்கில் உள்ளது என்பதற்கு வருவாய் ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும்.

5. பஜனை கோயில் தெருவிற்கு கிழக்கில் முத்தன் (எ) முனுசாமி நிலம் கிடையாது என்றால் சரியல்ல, வில்லங்க சான்று உள்ளது. ஜெயராமன் என்பவர் அவர் உயிரோடு இருக்கும் காலத்தில் அவருடைய 2வது மனைவி கெஜலட்சுமிக்கு வாய் மொழியாக கொடுத்தார் என்றால் சரிதான். ஜெயராமன் வாய் மொழியாக கொடுத்தார் என்று நான் சொல்லியது எந்த வருடம் நடந்தது என்றால் 1994ல் கிரையம் வாங்கி 1996ம் வருடம் கொடுத்தார். 1994ம் வருடம் ஜெயராமன் கிரையம் பெற்றார் என்றாலும், அதற்கு பட்டா எதுவும் பெறப்படவில்லை என்றால் சரிதான்.

6. வழக்கு சொத்து சம்மந்தமாக கெஜலட்சுமி என்பவர் செய்யார் சார் ஆட்சியரிடம் ஒரு மனு கொடுத்தார் என்றால் சரிதான். மேற்படி மனு மீது விசாரணை நடந்ததா என்றால் நடந்தது. பஜனை கோயிலுக்கு கிழக்கு பக்கம் உள்ள சொத்து தேவேந்திரனுக்கு பாத்தியப்பட்டது என்றாலும், அவர் தன் பிள்ளைகளுக்கு எழுதி கொடுத்தார் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை 2016ம் ஆண்டிலிருந்து வாதிகள்தான் அனுபவித்து வருகிறார்கள்

என்றாலும், இவ்வழக்கின் 2ம் பிரதிவாதி எந்த காலத்திலும் அனுபவித்து வந்ததில்லை என்றால் சரியல்ல. 1994ம் ஆண்டிலிருந்து இந்நாள் வரை ஜெயராமன் அனுபவித்து வந்ததற்கு எந்த வருவாய் ஆவணமும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

7. அதேப்போல் வாதியின் தந்தை தேவேந்திரன் ஆரணி கிராமிய காவல் நிலையத்தில் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு புகார் அளித்தார் என்றால் சரியல்ல, 2ம் பிரதிவாதிதான் புகார் கொடுத்தார். தேவேந்திரன்தான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து காவல் நிலையத்தார் வழக்கு சொத்தை பார்வையிட்டு எந்த தொந்தரவும் செய்யக் கூடாது என்று உத்தரவிட்டார்கள் என்றால் சரியல்ல. வழக்கறிஞர் ஆணையர் இடத்தை பார்த்தார் என்றாலும் அப்போது அங்கு வாதிகள் மற்றும் நான், 2ம் பிரதிவாதி உடன் இருந்தோம் என்றால் சரிதான். வழக்கு சொத்தின் நில அளவை புலவரைபடத்தின் அடிப்படையில்தான் சர்வேயர் நிலத்தை அளந்தார் என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது.

8. வழக்கறிஞர் ஆணையர் அளந்து பார்த்த போது கி x மே 15 அடி வ x தெ 33 அடி என்பது போல் இல்லை என்றால் சரியல்ல, வழக்கறிஞர் ஆணையர் சொல்வது பொய். வழக்கறிஞர் ஆணையரின் அறிக்கையை நான் பார்த்தேனா என்றால் இல்லை, 2ம் பிரதிவாதிதான் பார்த்துள்ளார். வழக்கறிஞர் ஆணையர் அறிக்கையில் உள்ள விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி சென்னையில் பிறந்து வளர்ந்து திருமணத்திற்கு பிறகும் சென்னையில் வசித்து வருகிறார் என்றால் சரிதான். நான் சொல்லியவாறு 2ம் பிரதிவாதி சென்னையில் வசித்து வருவதால் அவர் வழக்கு சொத்தை அவர் எந்த காலத்திலும் அனுபவித்து வந்ததில்லை என்பதால் அவருக்கு வழக்கு சொத்தில் எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல.

9. அதேப்போல் மேற்படி ஜெயராமன் 1994ம் ஆண்டு கிரையம் பெற்றார் என்பது தவறு என்றாலும், ஆவணங்களை சரி பார்க்காமல் கிரையம் பெற்றார் என்றால் வில்லங்க சான்று பார்த்துதான் கிரையம் பெற்றார். அதேப்போல் 2ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் வில்லங்க சான்று இல்லை என்றால் எனக்கு அதைப் பற்றி தெரியாது. வாதியின் அனுபவத்தை 1, 2 பிரதிவாதிகள் தடை செய்வதால் அதை ஆதரிக்க 3 முதல் 5

பிரதிவாகள் துணையாக இருப்பதால் அவர்களை இவ்வழக்கில் அவசியமான தரப்பினராக சேர்க்கப்பட்டுள்ளனர் என்றால் சரியல்ல. வழக்கு சொத்து முழுமையாக வாதிக்கு உரிமையுடையது என்பதால் தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிவடைந்தது. மறு விசாரணை இல்லை**

**நேரம் - 12.55**

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Plaintiffs / Defendants and admitted by the witness to be correct.

Sd/- D.V.Koperundevi
District Munsif,
Arni